**செ. கு. எண்: 117** **நாள் :21.06.2014**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 21.6.2014

நாமக்கல் மாவட்டம், நல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. M.கோவிந்தராஜ் அவர்கள் 7.4.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. ரவிசங்கர் அவர்கள் 9.4.2014 அன்று திமிரி – ஆற்காடு சாலையில் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், சென்னை காவல் ஆயுதப்படை-1, “B” நிறுமம், 9-ம் அணியில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.பாரமலை அவர்கள் 10.4.2014 அன்று ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்ட ஆயுதப்படைப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. P.சுரேஷ் அவர்கள் 10.4.2014 அன்று உடல் நலக் குறைவால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், கவரப்பேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. மகேந்திரன் அவர்கள் 14.4.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், சிறார் நல காவல் அலகு-1, உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. P.T.ஜார்ஜ் அவர்கள் 15.4.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், M.புதுப்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. C.தாஸ் அவர்கள் 17.4.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.நாகசுப்பிரமணியன் அவர்கள் 18.4.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்ட ஆயுதப்படை பிரிவில் காவலராகப் பணி புரிந்து வந்த செல்வி சண்முகபிரியா அவர்கள் 21.4.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர்கள் கோவிந்தராஜ், ஜார்ஜ், தாஸ்; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் சுரேஷ், மகேந்திரன்; தலைமைக் காவலர் நாகசுப்பிரமணியன், முதல்நிலைக் காவலர் ரவிசங்கர்; காவலர்கள் பாரமலை, சண்முகபிரியா; ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**